03.09.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### சோழவரத்தில் 83 மி.மீ. மழை

திருவள்ளூர் மாவட்டம், சோழவரத்தில் 83 மி.மீ. மழை அளவு பதிவானது.

திருவள்ளூர் சுற்றுப்புற பகுதிகளில், கடந்த சில நாள்களாக கடுமையான வெப்பம் நிலவி யது.

இந்நிலையில், வியாழக்கிழமை மாலை முதல் வெள்ளிக்கிழமை பிற்பகல் வரை மழை விட்டு விட்டுப் பெய்தது.

இதில், அதிகபட்சமாக சோழவரத்தில் 83 மி.மீ. மழையும், குறைந்தபட்சமாக ஆர்.கே.பேட்டையில் 8 மி.மீ. மழையும் பதிவாகியது.

மழையளவு விவரம் (மி.மீ): சோழவரம் - 83, செங்குன்றம் - 75, அம்பத்தூர் - 74, தாமரைப்பாக்கம் - 73, பொன்னேரி - 58, பூண்டி - 46, செம்பரம்பாக்கம் - 40, பூந்தமல்லி - 33, திருவாலங்காடு - 27, திருவள்ளூர் - 18, கும்மிடிப்பூண்டி - 15, திருத்தணி - 10, பள்ளிப்பட்டு - 9, ஆர்.கே.பேட்டை - 8 மி.மீ.

### "கர்நாடக அணைகளில் நீர் இருப்பு கடந்த ஆண்டைவிட அதிகம் உள்ளது'

கர்நாடகம், ஆந்திரம் உள்ளிட்ட பல மாநில அணைகளில் நீர் இருப்பு கடந்த ஆண்டைவிட அதிகமாக உள்ளது என்று மத்திய நீர்வளத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கர்நாடகத்தில் போதுமான நீர் இல்லை என்று கூறி தமிழக விவசாயிகளுக்கு தண்ணீர் திறந்துவிட அந்த அரசு மறுத்து வரும் நிலையில் மத்திய நீர்வளத் துறை இந்த தகவலைத் தெரிவித்துள்ளது முக்கியத்துவம் பெறுகிறது.

இது தொடர்பாக மத்திய நீர்வளத் துறை அமைச்சகம் மேலும் கூறியுள்ளதாவது:

நாட்டில் உள்ள முக்கியமான 91 அணைகளில் மொத்த கொள்ளளவில் 67 சதவீத அளவுக்கு நீர் இருப்பு உள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 14 சதவீதம் அதிகம். கடந்த 10 ஆண்டு நீர் இருப்பு சராசரியில் இப்போதைய நீர் இருப்பு 99 சதவீதமாகும்.

தமிழகம், குஜராத், திரிபுரா, ஹிமாசலப் பிரதேசம், உத்தரகண்ட் ஆகிய மாநிலங்களில் உள்ள முக்கிய அணைகளில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது நீர் இருப்பு குறைவாகவே உள்ளது.

ஆனால், கர்நாடகம், ஆந்திரம், தெலங்கானா, பஞ்சாப், ராஜஸ்தான், ஜார்க்கண்ட், ஒடிஸா, மகாராஷ்டிரம், மேற்கு வங்கம், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், ஆகிய மாநிலங்களில் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு நீர் இருப்பு அதிகமாக உள்ளது.

செப்டம்பர் 1-ஆம் தேதி கணக்குப்படி ஒட்டுமொத்தமாக நாட்டில் உள்ள அணைகளில் 10,524 கோடி கியூபிக் மீட்டர் நீர் உள்ளது.

அனைத்து அணைகளின் மொத்த கொள்ளளவு 25,338 கோடி கியூபிக் மீட்டர் ஆகும்.

## செப். 7-இல் வெள்ளாடு வளர்ப்பு இலவச பயிற்சி முகாம்

மயிலாடுதுறையில் வெள்ளாடு வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி முகாம் செப். 7 ஆம் தேதி நடைபெற உள்ளது என நாகை கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மையத்தின் தலைவர் பி. சீனிவாசன் கூறியது:

நாகை கால்நடை மருத்துவமனை வளாகத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் செப். 7 ஆம் தேதி மயிலாடுதுறை கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் அலுவலகப் பயிற்சிக் கூடத்தில் வெள்ளாடு வளர்ப்பு என்ற தலைப்பில் இலவச பயிற்சி நடைபெற உள்ளது. இப்பயிற்சியில் வெள்ளாடுகளின் இனங்கள், கொட்டகை அமைப்பு, தீவன மேலாண்மை, இனப்பெருக்க மேலாண்மை மற்றும் நோய் பராமரிப்பு உள்ளிட்ட தலைப்புகளில் பயிற்சி

அளிக்கப்படும். காலை 10 மணிக்குத் தொடங்கும் பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் நேரிலோ அல்லது 04365-247123 என்ற தொலைபேசி எண்ணிலோ நாகை கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தை முன்கூட்டியே அணுகலாம் எனக் கூறியுள்ளார்.

## கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம் தொடக்கம்

நாகை மாவட்டத்தில் கோமாரி நோய்த் தடுப்புத் திட்டத்தின் 11-ஆவது சுற்று தடுப்பூசி போடும் பணியின் முதல் கட்ட பணிகள் செப். 1-ஆம் தேதி தொடங்கி செப். 7-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

தேசிய கால் மற்றும் வாய் கோமாரி நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொடங்கி இதுவரை 10 சுற்றுகள், கால்நடைகளுக்கு இலவசமாக தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், 11-ஆவது சுற்று தடுப்பூசி போடும் பணிகள் வியாழக்கிழமை (செப். 1) தொடங்கி செப். 21-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இதில், முதல் கட்ட தடுப்பூசி போடும் பணிகள் செப். 1-ஆம் தேதி தொடங்கி செப். 7-ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இப்பணியை, நாகை ஒன்றியம், முட்டம் கிராமத்தில் மாவட்ட ஆட்சியர் சு. பழனிசாமி வியாழக்கிழமை தொடங்கி வைத்தார்.

அப்போது, தடுப்பூசி போடும் பணிக்கென தனி குழுக்கள் அமைக்கப்பட்டு, குளிர் சங்கிலி முறையில் அனைத்து கிராமங்களிலும் பசு மாடுகள், எருமை மாடுகளை கணக்கிட்டு, இலவசமாக தடுப்பூசி போடப்படவுள்ளது. இந்த வாய்ப்பை கால்நடை வளர்ப்போர் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் ஆட்சியர். கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் சிவராமகிருஷ்ணன், உதவி இயக்குநர்கள் சுப்பையன், செந்தில், ஆய்வாளர் பாரிவேந்தன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

பரமத்தி ஊராட்சி ஒன்றியத்துக்குள்பட்ட பகுதிகளில் கால்நடைகளுக்கான கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

வெள்ளாளபாளையம், கீழக்கடை, ஓவியம்பாளையம், சாணிப்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் கால்நடைகளுக்கான 11-ஆம் சுற்று கோமாரி நோய் இலவச தடுப்பூசிப் போடும் முகாம் நடைபெற்றது.

முகாமில் 305 பசுக்களும், 345 எருமைகளுக்கும் தடுப்பூசிப் போடப்பட்டது.

கால்நடை மருத்துவர்கள் மணிவேல், சீனிவாசன் உள்ளிட்ட மருத்துவர்கள் இப்பணியில் ஈடுபட்டனர்.

வரும் 21-ஆம் தேதி வரை ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராமங்களில் இம்முகாம் நடைபெறும் எனவும், இந்த வாய்ப்பை கால்நடை வளர்போர் பயன்படுத்திக் கொண்டு பயன்பெற வேண்டும் என கால்நடை மருத்துவக் குழுவினர் தெரிவித்தனர்.

## கிருஷ்ணகிரி அணையில் இருந்து பாரூர் ஏரிக்கு தண்ணீர் திறப்பு

கிருஷ்ணகிரி அணையில் இருந்து பாரூர் ஏரிக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த 30-ஆம் தேதி இரவு பரவலாக மழை பெய்தது. இதனால் கிருஷ்ணகிரி அணையின் நீர்வரத்து அதிகரித்தது. வியாழக்கிழமை நிலவரப்படி அணையின் மொத்த உயரமான 52 அடியில் 50.02 அடி தண்ணீர் இருந்தது. அணைக்கு வினாடிக்கு 116 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. இதையடுத்து, அணையின் ஆற்றுக்கால்வாய் மூலம் பாரூர் ஏரிக்கு 167 கன அடி தண்ணீரும், அணைக்கு வரும் 116 கன அடி தண்ணீரும் தென்பெண்ணை ஆற்றில் திறந்துவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் காவேரிப்பட்டணம், பாரூர் பகுதி விவசாயிகள் பயனடைவார்கள் என பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## "தண்ணீர் பிரச்னைக்குத் தீர்வு இயற்கை விவசாயம் மட்டுமே

தண்ணீர் பற்றாக்குறையை சமாளிப்பதற்கு விவசாயிகள் இயற்கை விவசாயத்துக்கு மாறவேண்டும் என்று பிஏபி கண்காணிப்பு பொறியாளர் (பொதுப்பணித் துறை) இளங்கோவன் பேசினார்.

உலக தென்னை தினத்தை முன்னிட்டு பொள்ளாச்சியில் விவசாயிகள் பங்கேற்ற சிறப்பு கருத்தரங்கு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு, பொள்ளாச்சி மக்களவை உறுப்பினர் மகேந்திரன் தலைமை வகித்தார். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி, பிஏபி கண்காணிப்பு பொறியாளர் (பொதுப்பணித் துறை) இளங்கோவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழக தென்னை நிறுவனங்களின் கூட்டமைப்பின் தலைவர் சக்திவேல் வரவேற்றார்.

இதில் பிஏபி கண்காணிப்பு பொறியாளர் இளங்கோவன் பேசியதாவது:

விவசாயிகளுக்கு மிகப்பெரிய பிரச்னையாக இருப்பது பாசனத்திற்கான தண்ணீர் பற்றாக்குறைதான். தண்ணீர் பற்றாக்குறையை சமாளிப்பதற்கு விவசாயிகள் இயற்கை விவசாயத்துக்கு மாறவேண்டும். இயற்கை விவசாயத்துக்கு மாறினாலே 40 சதவீதம் தண்ணீர் பிரச்னை தீர்ந்துவிடும். பண்ணைக்குட்டைகள் அமைப்பது, நீர்சிக்கனம், மூடாக்கு முறை போன்றவற்றை விவசாயிகள் பின்பற்றவேண்டும். பி.ஏ.பி., விவசாய பகுதிகளுக்கு கூடுதல் தண்ணீர் வழங்க ஆனைமலையாறு-நல்லாறு திட்டங்களை நிறைவேற்றவேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் வேளாண்மைத் துறை, தென்னை வளர்ச்சி வாரியம், வேளாண் அறிவியல் நிலையம், நபார்டு வங்கி நிர்வாகிகள், பயிர் பாதுகாப்புத் துறை, சமூக அறிவியல் துறை, வாணவராயர் வேளாண் கல்வி நிறுவனம், தோட்டக்கலைத் துறை, முன்னோடி விவசாயிகள் பங்கேற்றனர். இதில், இயற்கை விவசாயி மதுராமகிருஷ்ணன் நடுவராக பங்கேற்ற விவசாயம் குறித்த சிறப்பு பட்டிமன்றம் நடைபெற்றது. விநாயகா தென்னை உற்பத்தியாளர் நிறுவனத் தலைவர் பத்மநாபன் நன்றி கூறினார்.

ஆழியாறு தென்னை ஆராய்ச்சி நிலையம்: ஆழியாறு தென்னை ஆராய்ச்சி நிலையம் சார்பாக உலக தென்னை தினம் கொண்டாடப்பட்டது.

இதில், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி தலைமை வகித்து பேசுகையில், தற்போது விவசாயிகள் பெரும்பாலானோர் இயற்கை விவசாயத்தை மறந்துவிட்டனர். இதனால், இன்று பல்வேறு பிரச்னைகளை சந்தித்து வருகின்றனர். முன்னோர் செய்த பாரம்பரிய விவசாய முறையை இழந்துவிட்டனர். விவசாயிகள் தங்களை வளப்படுத்திக்கொள்ள இயற்கை விவசாயத்தை பின்பற்றவேண்டும் என்றார்.

ஆழியாறு தென்னை ஆராய்ச்சி நிலையத் தலைவர் ஷோபா, பேராசிரியர் ராஜமாணிக்கம், விவசாயிகள், தென்னை வளர்ச்சி வாரிய அதிகாரிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### கொழுப்பைக் குறைக்கும் கரும்புச்சாறு

உடல் இளைக்க ஓடுகின்றனர், நடக்கின்றனர். உடல் இளைக்க கரும்புச்சாறே போதும் என்கிறது ஓர் ஆஸ்திரேலிய ஆய்வு. கரும்புச்சாறு குடிப்பதால் அதில் உள்ள உயிர்வேதிப் பொருட்கள் உடலில் உள்ள தேவையற்ற கொழுப்பைக் குறைக்கும். உடல் எடை குறைவதால் ஏற்படும் சோர்வை நீக்கும்.ரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தும். 12 வாரங்கள் தொடர்ந்து சாப்பிடும் போது பலன் வெளிப்படையாகத் தெரியும். கரும்பை சாறாக இல்லாமல் கடித்து சாப்பிடுவது நார்ச்சத்தினை உடலுக்கு தருகிறது.

## நீர் மேலாண் சேகரிப்பு திட்டம்: தொழில்நுட்ப விளக்க கூட்டம்

சூளகிரி: சூளகிரி அடுத்த பிள்ளைகொத்தூர் கிராமத்தில், நீர் மேலாண்மை மற்றும் நீர் சேகரிப்பு தொழில் நுட்ப விளக்க கூட்டம் நடந்தது. காமன்தொட்டி பஞ்., தலைவர் சந்திரசேகர் தலைமை வகித்தார். கூட்டத்தில், மழைநீர் சேகரிப்பு முறைகள் மற்றும் பயன்கள், பண்ணை குட்டை, தடுப்பணை மூலம் நீர் சேகரிப்பு மற்றும் அவற்றின் பயன்கள், சொட்டுநீர் பாசனம், தெளிப்பு பாசனம் ஆகியவை குறித்து, விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. பாசன சங்க தலைவர் நாராயணசாமி, வேளாண்மை உதவி இயக்குனர் விஸ்வநாதரெட்டி, வேளாண்மை அலுவலர் மோகன் சகாயராஜ் மற்றும் சூளகிரி தாலுகாவிற்கு உட்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## நேந்திரன் வாழை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்

கூடலூர்: கூடலூாரில், இஞ்சிக்கு ஏற்பட்ட விலை வீழ்ச்சியால், விவசாயிகள் நேந்திரன் வாழை பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கூடலூர் பகுதியில் தேயிலை, மலை காய்கறி, நெல் விவசாயத்தை தவிர, இஞ்சி, நேந்திரன் வாழையும் அதிகளவில் விளைந்து வருகிறது. நடப்பு ஆண்டில் இஞ்சிக்கு கடும் வீழ்ச்சி ஏற்பட்டதால், விவசாயிகள் நஷ்டத்தை சந்தித்துள்ளனர். அதே நேரம் நேந்திரன் வாழைக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. இதனால், நேந்திரன் பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

விவசாயிகள் கூறுகையில், 'கடந்த ஆண்டு இஞ்சிக்கு ஓரளவு நல்ல விலை கிடைக்தால், அதிகளவில் இஞ்சி பயிரிட்டோம். கற்போது, நேந்கிரன் வாழைக்கு அதிக விலை கிடைத்து வருகிறது. அடுத்த ஆண்டும் இதே போன்று விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில், நேந்திரன் வாழையை அதிகளவில் பயிரிட்டு வருகிறோம்' என்றனர்.

## கால்நடை வளர்த்தால் பொருளாதாரம் உதவும்

ஊட்டி: 'கால்நடை வளர்ப்பு, ஒரு குடும்பத்தின் பொருளாதாரத்துக்கு உதவும்,' என, தெரிவிக்கப்பட்டது.

ஊட்டி அருகே கீழ் கவ்வட்டியில், கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், 11வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாம் துவங்கியது.
கலெக்டர் சங்கர் துவக்கி வைத்து பேசியதாவது:

கால்நடை வளர்ப்பு என்பது, மிகச் சிறந்த தொழில். பசு வளர்ப்பு மூலம், பால், தயிர் கிடைக்கிறது; அவற்றை விற்பதன் மூலம் வருமானம் கிடைக்கும். எருதுகள், விவசாய நிலத்தை உழுவதற்கு உதவுகிறது.

எருது, ஆடு, பசுவின் கால்நடைகளின் சாணம் மூலம், இயற்கை எரிவாயு தயாரிக்க முடியும். அக்கால்நடைகள் இறந்தப் பின்பும் கூட, அதன் தோலின் மூலம் வருமானம் கிடைக்கிறது. ஒரு பசு மாட்டின் மூலம் கிடைக்கும் வருமானத்தை கொண்டு, குடும்பத்தை காப்பாற்ற முடியும்.

எனவே, கால்நடைகளை நோயின்றி காப்பதும், வளர்ப்பதும் முக்கியம். மேலும், ஆடு, மாடு, பன்றி போன்ற கால்நடைகளை தாக்கும் கோமாரி நோய்,சப்பை, அடைப்பான் நோய், தொண்டை அடைப்பான் நோய் ஆகிய

நோய் கிருமிகளை கண்டறிய வேண்டும். இந்நோய்கள் வராமல் தடுக்க, ஆறு மாதத்திற்கு ஒரு முறை, தங்கள் கால்நடைகளுக்கு இலவசமாக அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையில் கண்டிப்பாக தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். இவ்வாறு, கலெக்டர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குனர் சண்முகவேல் மற்றும் துறை சார்ந்த அலுவலர் பங்கேற்றனர்.

## மலைத்தோட்ட பயிர்கள் உற்பத்தியாளர் சங்கம் துவக்கம்

தாண்டிக்குடி,
தாண்டிக்குடியில் கோடை மலைத் தோட்டப்பயிர்கள் உற்பத்தியாளர் சங்க துவக்க விழா நடந்தது.

நபார்டு வங்கி முதன்மை பொது மேலாளர் நாகூர் அலி ஜின்னா தலைமை வகித்தார். முன்னோடி வங்கி மேலாளர் ஜான் நிக்கல்சன் முன்னிலை வகித்தார்.

காபி ஆராய்ச்சி நிலைய துணை இயக்குனர் அப்துல்ரகுமான், திண்டுக்கல் நபார்டு வங்கி மேலாளர் சஞ்சீவி பேசினர்.

முன்னதாக மலைத்தோட்டப் பயிர்கள் சங்க சேர்மன் செல்வேந்திரன் வரவேற்றார்.

தோட்டக்கலை அலுவலர் ராஜபாலமுருகன், ஸ்பேஸ் தொண்டு நிறுவன இயக்குனர் ரமேஷ் கலந்து கொண்டனர்.

நபார்டு வங்கி பொது மேலாளர் நாகூர் அலி ஜின்னா பேசியதாவது: மத்திய அரசு மற்றும் நபார்டு வங்கி உதவியுடன், விவசாயிகள் உற்பத்தி செய்யும் மலைத் தோட்ட பயிர்களுக்கு உரிய விலை கிடைக்க இத்திட்டம் கை கொடுக்கும். விவசாயத்தில் புதிய தொழில்நுட்பங்களை புகுத்தி, பயிற்சியளித்து வருவாயை இரட்டிப்பாக்கும் முயற்சி இது, என்றார்.

## நஷ்டத்தில் இருந்து மீள விவசாயிகளுக்கு யோசனை

திண்டுக்கல், திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள் தண்ணீர் இல்லாமல் அவதிப்படுவதை தடுக்கவும், நஷ்டத்தில் இருந்து விடுபடவும் தமிழ்நாடு நீர் வடிப்பகுதி மேம்பாட்டு திட்டம் மூலம் புதிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வேளாண்மைத்துறை இணை இயக்குனர் தங்கசாமி கூறியதாவது: திண்டுக்கல் மாவட்டத்தில் சராசரி மழையளவு 836 மி.மீ.,. இந்த மழை ஆண்டுதோறும் பெய்தாலும், சில நேரங்களில் ஒரேநாளில் பெய்து விடுகிறது. இப்படி ஒரே நேரத்தில் பெய்யும் மழையை நாம் சேகரிக்க வேண்டும். இதற்காகத்தான் தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு ஆணையம் மூலம் புதிய திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதில் நீர் மற்றும் மண் பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தடுப்பணைகள், வரப்பு கட்டுதல், கால்வாய் உயர்த்துதல், பண்ணைக்குட்டைகள், அமிழ்வு நீர் குட்டைகள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மண், நீர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலம் 50 ஆயிரம் எக்டேரில் நிலம் சாகுபடி செய்யப்படுகிறது.

மேலும் பூசாரிபட்டி, அப்பியம்பட்டி பகுதிகளில், ஜெர்மனியின் ஒத்துழைப்புடன் காலநிலை தகவல் அமைப்பு திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. பருவ மாறுபாடுகளுக்கு ஏற்ப விவசாயிகளும் முன்னேற்பாடுகளை செய்து வெற்றிபெறலாம், என்றார்.

## மேட்டூர் அணை நீர்வரத்து 10,694 கனஅடியாக உயர்வு

மேட்டூர்: மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று வினாடிக்கு, 10 ஆயிரத்து,694 கனஅடியாக அதிகரித்தது. கர்நாடகா அணைகளில் இருந்து காவிரியாற்றில் திறக்கப்பட்ட நீரின் ஒருபகுதி, தொடர்ச்சியாக மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது. நேற்று முன்தினம் வினாடிக்கு, 7,153 கனஅடியாக இருந்த, மேட்டூர் அணை நீர்வரத்து, நேற்று வினாடிக்கு, 10 ஆயிரத்து,694 கனஅடியாக அதிகரித்தது. கூடுதல் நீர்வரத்தால் நேற்று முன்தினம், 73.37 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று, 74.25 அடியாக உயர்ந்தது. நீர்இருப்பு, 36.46 டி.எம்.சி.,யாக உள்ளது.

## செம்மறி ஆடுகள் வளர்ப்பு விவசாயிகள் அதிக ஆர்வம்

திருவாடானை,:திருவாடானை பகுதிகளில் செம்மறி ஆடுகள் வளர்ப்பதில் விவசாயிகள் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.திருவாடானை சுற்றுவட்டாரப் பகுதிகள் விவசாயத்தை மட்டுமே நம்பி உள்ளது. இப்பகுதி விவசாயிகள் பெரும்பாலும் பயிர்களுக்கு மாட்டு சாணம், தழைகள், ஆட்டுக்கிடை கழிவுகள் ஆகியவற்றை உரமாக பயன்படுத்தி வந்தனர். இதற்காக ஒவ்வொரு வீடுகளிலும் மாடு, ஆடுகள் வளர்க்கப்பட்டு வந்தது. இயற்கை உரத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் விளைபொருட்கள் தரமானதாக இருந்தது. நாளடைவில் மேய்ச்சல் நிலங்கள் அழிக்கப்பட்டதால் தீவன பற்றாக்குறை, பராமரிக்க ஆள் பற்றாக்குறை போன்ற பல காரணங்களால் கால்நடைகள் வளர்ப்பு சுருங்கியது. விளைவு பயிர்களுக்கு ரசாயன உரங்களை பயன்படுத்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதன்மூலம் உற்பத்தி செய்யப்படும் விளைபொருட்கள் உடல் நலத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது. இதை உணர்ந்துகொண்ட விவசாயிகள் மீண்டும் இயற்கை விவசாயத்திற்கு திரும்பிவருகின்றனர். இதற்காக ஆடு, மாடுகள் வளர்ப்பில் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். இதிலும் குறிப்பாக லாபகரமான தொழில் என்பதால் செம்மறி ஆடுகளை வளர்க்கின்றனர். இவை இறைச்சிக்காகவும், இவற்றின் கழிவுகள் இயற்கை உரமாகவும் பயன்படுவதால் விவசாயிகளுக்கு இரட்டிப்பு வருவாய் கிடைக்கிறது. இது குறித்து செம்மறி ஆடு வளர்ப்போர் கூறுகையில்,“வெள்ளாட்டு கறியை விட செம்மறி ஆட்டு கறி சுவையாக இருப்பதால் கேரளா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த வியாபாரிகள் அதிக விலைக்கு ஆடுகளை வாங்கி

செல்கின்றனர். திருமணம் உள்ளிட்ட வீட்டு விசேஷ நிகழ்ச்சிகளுக்கும் செம்மறி ஆடுகளை மொத்தமாக வாங்குகின்றனர். இதன் இறைச்சி கிலோ ரூ.450 வரை விற்பனை செய்யப்படுகிறது.

இவற்றின் கழிவுகள் பயிர்களுக்கு சிறந்த உரம் என்பதால் விவசாய நிலங்களில் ஆட்டுக்கிடை அமைக்க விவசாயிகள் விரும்புகின்றனர். இதன்மூலம் நல்ல வருவாய் கிடைப்பதால் செம்மறி ஆடு வளர்ப்பில் ஆர்வம் செலுத்தி வருகிறோம்," என்றனர்.

## தோட்டக்கலை பண்ணையில் வீணாகும் தண்ணீர் சேகரிப்பு

ராமநாதபுரம்,:-அரசு மாதிரி தோட்டக்கலை பண்ணையில் வீணாகும் தண்ணீர் மீண்டும் கிணற்றில் சேகரிக்கப்படுகிறது.ராமநாதபுரம் மாவட்டம், சுந்தரமுடையான், கீழ நாகாச்சியில் அரசு மாதிரி தோட்டக்கலை பண்ணைகள் உள்ளன. சுந்தரமுடையான் தோட்டக்கலை பண்ணையில், பசுமை குடில் அமைத்து குடமிளகாய், தக்காளி சாகுபடி செய்கிறது. தற்போது வெள்ளரி சாகுபடி செய்ய உள்ளனர்.
சொட்டுநீர்ப்பாசன முறையில் பண்ணையில் மரக்கன்றுகளுக்கு தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. இதற்காக அமைக்கப்பட்டுள்ள தனி மோட்டாரில் ஏற்படும் அழுத்தத்தை குறைக்க தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அவ்வாறு மோட்டார் பைப்லைனில் வேளியேற்றப்படும் தண்ணீர் வீணாகாமல் குழாய் மூலம் மீண்டும் கிணற்றில் சேர்க்கப்படுகிறது. இதன் மூலம் தண்ணீர் சிக்கனம் கடைபிடிக்கப்படுகிறது.

## விவசாயிகள் கருத்தரங்கு

ராமநாதபுரம்:ராமநாதபுரம் அருகே பத்தனேந்தல் கிராமத்தில் விவசாயிகள் கருத்தரங்கு நடந்தது. வேளாண் தொழில்நுட்ட மேலாண் முகமை துணை கிட்ட இயக்குனர் உதுமான் முகைதீன் தலைமை வகித்தார். ஊராட்சி தலைவர் உடையநாயகம் முன்னிலை வகித்தார். ராமநாதபுரம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் வேல்குமார் வரவேற்றார். விதை ஆய்வு துணை இயக்குனர் செல்வபாண்டி, தரக்கட்டுப்பாடு உதவி இயக்குனர் கண்ணையா, கலெக்டரின் நேர்முக உதவியாளர் அம்பேத்குமார், வேளாண் பொறியியல் துறை உதவி பொறியாளர் பாண்டியராஜன், தோட்டக்கலை துணை அலுவலர் காசிநாதன், பாலமுருகன், ராஜலட்சுமி பேசினர். ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப

மேலாளர் கோசலா தேவி, உதவி மேலாளர்கள் சேகர், சுபாஷ் சந்திர போஸ் செய்தனர்.

## பொம்மிடி பகுதியில் சாமந்திப்பூ சாகுபடி அமோகம்

அரூர்: பொம்மிடி பகுதியில் ஆயுத பூஜை பண்டிகையை முன்னிட்டு விவசாயிகள் அதிகளவில் சாமந்திப்பூவை சாகுபடி செய்துள்ளனர்.

வரும் அக்டோபர், 10ம் தேதி ஆயுத பூஜை பண்டிகை வருவதை கருத்தில் கொண்டு, தர்மபுரி மாவட்டம், பொம்மிடி பகுதியில், 200 ஏக்கர் பரப்பளவில் சாமந்திப் பூவை விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர்.

இதுகுறித்து, சுங்கர அள்ளியைச் சேர்ந்த விவசாயி சிவக்குமார் கூறியதாவது: வரும் ஆயுத பூஜை, விஜய தசமி உள்ளிட்டப் பண்டிகைகள் மற்றும் புரட்டாசி மாத விரதம் வரவுள்ளதால், சாமந்திப் பூக்களுக்கு கடும் கிராக்கி ஏற்படும். இதனால், விவசாயிகள் சாமந்திப் பூவை சாகுபடி செய்துள்ளனர். கடந்த பத்து ஆண்டு களாக சாமந்திப் பூவை சாகுபடி செய்து வருகிறேன். கிருஷ்ணகிரி மாவட்டம், ராயக்கோட்டையில் ஒரு சாமந்திப் பூ நாற்று, இரண்டு ரூபாய் என வாங்கி வந்து இரண்டு ஏக்கர் பரப்பளவில் நடப்பாண்டு வெள்ளை மற்றும் மஞ்சள் சாமந்தியை நடவு செய்துள்ளேன். தற்போது, ஒரு கிலோ சாமந்திப் பூக்கள், 30 ரூபாய்க்கு விற்பனையாகிறது. ஆயுத பூஜை பண்டிகையின் போது, ஒரு கிலோ சாமந்திப் பூக்கள், 70 ரூபாய் வரை விற்பனையாக வாய்ப்புள்ளது. சாமந்திப் பூக்களை சென்னை கோயம்பேட்டில் உள்ள வியாபாரிகள் நேரிடையாக வந்து கொள்முதல் செய்கின்றனர். தற்போது நல்ல மழை பெய்து வருவதால், நடப்பாண்டு சாமந்திப் பூக்களின் மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## நிலத்தின் வளத்தை பெருக்க 20 வகை தானியம் விதைப்பு: வலங்கைமான் விவசாயி புதிய முயற்சி



வலங்கைமான்: திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் தாலுகா, ஆதிச்சமங்கலம் கிராமத்தை சேர்ந்த முன்னோடி விவசாயி பரமகுரு ரசாயன உரம், ரசாயன பூச்சிக்கொல்லி ஆகியவற்றை பயன்படுத்தாமல் இயற்கை வழி வேளாண்மை மேற்கொள்ள திட்டமிட்டார். தனக்கு சொந்தமான 4 ஏக்கர் நிலப்பரப்பில் 80 கிலோ அளவிற்கு 20 வகை தானியங்கள் தெளிக்கப்பட்டுள்ளது.

இப்பயிர்கள் வளர்ந்து 60 நாட்களில் மடக்கி உழவு செய்யப்படவுள்ளது. பின்னர் இதே வகையான விதைகள் மீண்டும் தெளிக்கப்பட்டு செடிகள் நன்கு வளர்ந்து பூக்கும் தருணத்தில் மீண்டும் உழவு செய்யப்பட உள்ளது. இதன் மூலம் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக கெட்டிருந்த நிலத்தின் வளத்தை 6 மாதத்தில் மீட்டு எடுக்க

முடியும். இனி தொடர்ந்து இயற்கை விவசாயம் மூலம் சாகுபடி செய்து அதிக விளைச்சலை ஈட்ட திட்டமிட்டுள்ளதாகவும் விவசாயி பரமகுரு தெரிவித்தார்.

## கோழிகளுக்கு சாதகமான வெப்பநிலை; வானிலை மையம் தகவல்

நாமக்கல் : நாமக்கல் கால்நடை வானிலை ஆலோசனை மையம் வெளியிட்டுள்ள அறிக்கை: நாமக்கல் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதியில் வானம் வரும் 4 நாட்களும் பொதுவான மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் மழைப்பொழிவு இருக்கும். காற்றின் வேகம் மணிக்கு 4 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் மேற்கில் இருந்து வீசும்.

தென்மேற்கு பருவமழையின் தாக்கம், தமிழகத்தின் வட மற்றும் வடமேற்கு மாவட்டங்களில் மிதமான தாக்கம் கொண்டுள்ளது. இதனால் மேகமூட்டத்துடன் வானம் காணப்பட்டு, சில இடங்களில் மழைப்பொழிவுக்கு வாய்ப்புள்ளது. பகல் மற்றும் இரவு வெப்ப அளவுகள் கோழிகளுக்கு சாதகமாக காணப்படும். தீவன எடுப்பு, இனி வரும் காலங்களில் இயல்பாகவோ அல்லது இயல்பை விட சற்று அதிகரித்தோ இருக்கும். தீவனத்தில் பூஞ்சான் நச்சின் அளவுகள் அதிகமாக காணப்படுகின்றன.

எனவே உபயோகப்படுத்தும் தீவன மூலப்பொருட்களில், குறிப்பாக தானியங்களில் பூஞ்சான் நச்சு அளவை பரிசோதனை செய்த பின்னர் பயன்படுத்தவேண்டும். எனவே பண்ணையாளர்கள் தகுந்த உயிர் பாதுகாப்பு முறைகளையும், கோழிகளுக்கு அளிக்கப்படும் தீவனம் மற்றும் தண்ணீரில் ஈகோலை கிருமியின் தாக்கம் உள்ளதா என்பதை ஆய்வத்தில் பரிசோதனை செய்து அறிந்து கொள்ளவேண்டும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாவட்டத்தில் 3.72 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி

ஈரோடு, : ஈரோடு மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் தேசிய கோமாரி நோய் தடுப்பூசி திட்டத்தின்கீழ் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நேற்று ஈரோடு அருகே சின்னசேமூரில் நடந்தது. இந்த நிகழ்ச்சிக்கு கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் டாக்டர் ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார். இதில் சிறப்பு அழைப்பாளராக கலெக்டர் பிரபாகர் கலந்து கொண்டு முகாமினை துவக்கிவைத்து பேசியதாவது, ஈரோடு மாவட்டத்தில் 2 லட்சத்து 80 ஆயிரத்து 508 பசுமாடுகளும், 92 ஆயிரத்து 42 எருமை மாடுகளும் என 3 லட்சத்து 72 ஆயிரத்து 550 கால்நடை உள்ளன. கால்நடைகளை தாக்கும் கோமாரி நோயினால் கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்தி வருகிறது. கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்காமல் இருப்பதற்காக ஆண்டுக்கு இருமுறை கோமாரிநோய் தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் ஒரு மாநகராட்சி, 4 நகராட்சிகள், 9 தாலுகாக்கள், 42 பேரூராட்சிகள், 14 ஊராட்சி ஒன்றியங்கள், 375 வருவாய் கிராமங்கள், 225 ஊராட்சிகள், 3,199 குக்கிராமங்கள் ஆகியவற்றில் கோமாரிநோய் தடுப்பூசி முகாம் நடத்தப்படவுள்ளது. இதற்காக மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் 23 லட்சத்து 27 ஆயிரத்து 520 ரூபாய் மதிப்பில் 3.70 லட்சம் டோஸ் தடுப்பூசி மருந்துகள் பெறப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிராமத்திலும் தடுப்பூசி போடும் வகையில் ஒரு கால்நடை உதவி மருத்துவர் தலைமையில் 118 குழுஅமைக்கப்பட்டு காலை 6 மணி முதல் 9 மணி வரையிலும், மாலை 3 மணி முதல் 5 மணி வரையிலும் கோமாரிநோய் தடுப்பூசிகள் போடப்படவுள்ளது. நான்கு மாதத்திற்கு மேல் உள்ள கன்றுகளுக்கும், சினை மாடுகளுக்கும் தடுப்பூசி போடப்படும். தடுப்பூசி போடுவதால் பால்கறக்கும் மாடுகள், சினை மாடுகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. 1ம்தேதி தொடங்கப்பட்டுள்ள இந்த முகாம் வரும் 21ம்தேதி வரை 21 நாட்களுக்கு நடைபெறவுள்ளது. ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த அனைத்து விவசாயிகளும் தங்களது கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். இவ்வாறு கலெக்டர் பிரபாகர் பேசினார். இந்நிகழ்ச்சியில் கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி துணை இயக்குநர் சந்திரசேகரன், கால்நடை

நோய் புலனாய்வு பிரிவு உதவி இயக்குநர் கோவிந்தராஜ், உதவி இயக்குநர் ராதாகிருஷ்ணன் மற்றும் கால்நடை மருத்துவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## ஈரோடு சந்தையில் மாடு வரத்து அதிகரிப்பு

ஈரோடு, : ஈரோடு மாட்டுச்சந்தையில் நேற்று மாடுகள் வரத்து அதிகரித்தது. கால்நடைகளை நோய்கள் தாக்காமல் இருப்பதற்காக மருந்து தெளிக்கப்பட்டது. ஈரோடு கருங்கல்பாளையம் காவிரி செக்போஸ்ட் பகுதியில் வாரம் தோறும் வியாழக்கிழமை மாட்டு சந்தை நடைபெறுவது வழக்கம்., அதன்படி நேற்று மாட்டு சந்தை நடந்தது. இங்கு மாடுகளை விற்பனை செய்வதற்காக ஈரோடு, நாமக்கல், சேலம், கோவை, திருப்பூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து விவசாயிகள் மாடுகளுடன் வந்திருந்தனர். மாடுகளை வாங்கிச் செல்வதற்காக திருச்சி, சேலம், தர்மபுரி, திருவண்ணாமலை, கம்பம், தேனி மற்றும் ஈரோடு மாவட்டத்தின் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து ஏராளமானோர் வந்தனர். மேலும் ஆந்திரா, கர்நாடகா, கோவா, கேரளா போன்ற மாநிலங்களில் இருந்தும் வியாபாரிகள் வந்திருந்தனர். இதில் 500 எருமைமாடுகள், 550 பசுமாடுகள், 350 கன்றுகுட்டிகள் என மாடுகள் கொண்டுவரப்பட்டிருந்தது. பசுமாடு 16 ஆயிரம் முதல் 32 ஆயிரம் ரூபாய் வரையிலும், எருமை மாடுகள் 18ஆயிரம் முதல் 34 ஆயிரம் ரூபாய் வரையிலும், கன்றுகள் 2ஆயிரம் முதல் 7 ஆயிரம் ரூபாய் வரையிலும் விலை போனது. இந்நிலையில் மழைக்காலம் தொடங்கியுள்ள நிலையில் மாடுகளை நோய்கள் தாக்காமல் இருப்பதற்காக மாட்டுச்சந்தையில் தடுப்பு மருந்துகள் தெளிக்கப்பட்டு வருகிறது. கால்நடைகளின் பாதங்கள் வழியாக கிருமிகள் பரவாமல் தடுக்கும் வகையில் மருந்து தெளிக்கப்பட்ட தண்ணீர் தேக்கப்பட்டு அதில் கால்நடைகளை அழைத்துச் சென்று பின்னர் லாரிகளில் ஏற்றிச் சென்றனர்.

## மக்காச்சோளம் சாகுபடியை அதிகரிக்க திட்டம்

திருப்பூர், திருப்பூர் மாவட்டத்தில், மக்காச்சோளம் சாகுபடி பரப்பு மற்றும் மகசூலை அதிகரிக்க வேளாண் துறையினர் திட்டமிட்டுள்ளனர்.பல்லடம் மற்றும் நாமக்கல் பகுதிகளில் கறிக்கோழி, முட்டை கோழி வளர்ப்பு பண்ணைகள் மற்றும் நிறுவனங்கள் அதிகளவில் உள்ளன. கோழி மற்றும் மாட்டு தீவனம் தயாரிப்பிற்கு பிரதானமாக மக்காச்சோளம் உள்ளது. தமிழகத்தில் உற்பத்தி குறைவாக உள்ளதால், ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து மக்காச்சோளம்

கொள்முதல் செய்யப்படுகிறது. தேவை அதிகரிப்பு, உற்பத்தி குறைவு உள்ளிட்ட காரணங்களால் பற்றாக்குறை ஏற்பட்டு மக்காச்சோளம் விலை உயர்ந்து வருகிறது. ஒரு குவிண்டால் 1,800 ரூபாய் வரை விற்கிறது. 105 நாளில் மகசூல், 650 மி.மீ., என்ற அளவில் குறைந்த நீர் இருந்தால் போதும் ஆகிய காரணங்களினால் மக்காச்சோளம் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். மாவட்டத்தில் 54 ஆயிரத்து 608 எக்டேர் பரப்பளவில் சோளம், கம்பு, மக்காச்சோளம், ராகி ஆகிய சிறு தானியங்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், சிறு தானிய சாகுபடி பரப்பை 58 ஆயிரத்து 300 எக்டேராக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக விவசாயிகளுக்கு மானியம் வழங்க 56.75 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மக்காச்சோளம் உற்பத்திக்கு முக்கித்துவம் அளிக்கப்படுகிறது. மாவட்டத்தில் சராசரியாக 25 ஆயிரம் எக்டேரில் சாகுபடி செய்யப்படும் மக்காச்சோள பரப்பை மேலும் 1,100 எக்டேர் அதிகரிக்கவும், 2.25 லட்சம் டன் மக்காச்சோளம் உற்பத்தி செய்யவும், மக்காச்சோளம் சாகுபடியில் மகசூலை அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.இதற்கென பல்லடம், உடுமலை, தாராபுரம், மடத்துக்குளம், பொங்கலூர் வட்டாரங்களில், செயல்விளக்க திடல் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கென, வட்டார அளவில் பயனாளிகள் கலந்தாய்வு கூட்டம் நடத்தப்படுகிறது. இதில் தானிய பயிர் சாகுபடி உள்ளிட்ட தொழில்நுட்பங்கள், மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றுதல் உள்ளிட்டவை குறித்து விளக்கப்படுகிறது.

## கோமாரி தடுப்பு முகாம் ஆலோசனை கூட்டம்

துறையூர் : கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடத்துவது தொடர்பான ஆலோசனை கூட்டம் உப்பிலியபுரத்தில் நடைபெற்றது.

கால்நடைகளை தாக்கும் கொடிய நோய் தாக்குவதில் இருந்து பாதுகாக்க கால்நடை பராமரிப்புத் துறையினரால் வருடத்திற்கு இரண்டு முறை மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களில் கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. இதுவரை பத்து சுற்றுகள் முடிக்கப்பட்டுள்ளது. வரும் செப்டம்பர் 1ம் தேதி முதல் உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் தடுப்பூசி முகாம் நடத்துவது தொடர்பான ஆலோசனை கூட்டம் உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றிய கூட்ட அரங்கில் வட்டார வளர்ச்சி அலுவலர் மனோகரன் தலைமையில்

நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் உப்பிலியபுரம் கால்நடை மருந்துவ உதவி மருத்துவர் பெரியசாமி பேசும் போது. பதினோராவது சுற்றினை எவ்வித விடுபாடுமின்றி 100 சதவீத இலக்கினை எட்டிடும் வகையில் ஒவ்வொரு ஊராட்சியிலும் உள்ள வார்டு உறுப்பினர்கள், பால் கறப்பவர்கள், உழவர் மன்றத்தினர், சுய உதவி குழு உறுப்பினர்கள் கொண்டு கூட்டம் நடத்தி முகாம் பற்றிய செய்தியினை கால்நடை உரிமையாளர்களுக்கு தெரிவிக்க வேண்டும். தடுப்பூசி போட்டதை ஏற்கனவே கால்நடை பராமரிப்பு துறையினர் வழங்கிய அடையாள அட்டையில் பதியவும் அறிவுறுத்த வேண்டும் என்றார். கூட்டத்தில் ஊராட்சி தலைவர்கள் மற்றும் ஊராட்சி செயலர்கள் கலந்து கொண்டனர்.

## மயிலாடுதுறையில் 7ம் தேதி இலவச வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி

நாகை : நாகை கால்நடை மருத்துவமனை வளாகத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் சார்பில் வரும் 7ம் தேதி காலை 10 மணி அளவில் மயிலாடுதுறை கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் அலுவலக பயிற்சி கூடத்தில், வெள்ளாடு வளர்ப்பு என்ற தலைப்பில் இலவச பயிற்சி நடைபெற உள்ளது.

இதில் வெள்ளாடுகளின் இனங்கள், கொட்டகை அமைப்பு, தீவன மேலாண்மை, இனப்பெருக்க மேலாண்மை, நோய் பராமரிப்பு போன்ற தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெற விரும்புவோர் நேரிலோ அல்லது 04365 247123 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டோ தங்கள் வருகையை பதிவு செய்து கொள்ள வேண்டும் என கால்நடை பல்கலைக்கழக ஆராய்ச்சி மைய தலைவர் சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

## ஆர்.எஸ்.மங்கலம் பகுதியில் விவசாய பணிகள் துவக்கம்

ஆர்.எஸ்.மங்கலம், :ஆர்.எஸ்.மங்கலம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் விவசாயிகள் விவசாய பணிகளை துவக்கி உள்ளனர். கடந்த சில நாட்களாக பெய்த தொடர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஏற்கனவே உழவார பணிகள் செய்து தயார் நிலையில் இருந்ததால் தற்போது பெய்த மழையை பயன்படுத்தி விதைப்பு பணியில் இறங்கியுள்ளனர். ஆர்.எஸ்.மங்கலம், ஆனந்தூர்,

புலிவீரதேவன் கோட்டை மற்றும் அனைத்து பகுதியிலும் விதைப்பு பணி நடைபெறுகிறது. தொடர்ந்து மழை பெய்யும் பட்சத்தில் மேலும் பணிகளை விவசாயிகள் தொடர்வார்கள். இதுகுறித்து இப்பகுதி விவசாயிகள் கூறுகையில், 'கடந்த இரு தினங்களாக பெய்த மழையை நம்பி விதைத்துள்ளோம். தொடர்ந்து மழை பெய்தால் விதைப்பு முளைத்துவிடும். மேலும் பணிகளை தொடரலாம்' என்றனர்.

## தோட்டக்கலை துறை சார்பில் வாழை விவசாயிகளுக்கு செயல் விளக்கம்

தக்கலை : குமரி மாவட்ட தோட்டக்கலை துறை சார்பில் வாழை விவசாயிகளுக்கான செயல் விளக்கம் மற்றும் பயிற்சி முத்தலக்குறிச்சி கிராமத்தில் நடைபெற்றது. தக்கலை தோட்டக்கலை உதவி இயக்குநர் ஷீலாஜாண் வரவேற்றார். கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) நிஜாமுதீன், மாவட்ட தோட்டக்கலை இணை இயக்குநர் அசோக்மேக்ரின், மாவட்ட நீர்ப்பாசன சங்க தலைவர் வின்ஸ் ஆன்றோ, கல்குறிச்சி பஞ்சாயத்து தலைவர் ரமேஷ் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

இதில் வாழையில் தண்டு துழைப்பானை கட்டுப்படுத்த திருவனந்தபுரம் மத்திய கிழங்கு வகைப்பயிர் ஆராய்ச்சி நிலையத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மேன்மா பயன்படுத்துவது குறித்து திருவட்டார் தோட்டக்கலை அலுவலர் மணிகண்டன் செயல்விளக்கம் அளித்தார். வாழையில் நூற்புழு தாக்குதல் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து தோவாளை தோட்டக்கலை அலுவலர் கார்த்திக், ரசாயன மற்றும் உயிரியல் கட்டுப்பாடுகள் குறித்து தக்கலை தோட்டக்கலை அலுவலர் பிரகாஷ், வாழை தார் மூடுதல் குறித்து கிள்ளியூர் தோட்டக்கலை அலுவலர் சரண்யா ஆகியோர் செயல் விளக்கம் அளித்தனர். இதில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.